## குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் பராபவ வருடம், ஆடி மாதம் 18 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் நாள், திங்கள்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.232/2019**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-002975-2019 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரி பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>கரூர்நகர காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.433/2019.<br><br>எதிரியின் மீது இ.த.ச. 387, 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.<br>// எதிரி//<br>சந்தோஷ்(எ)சந்தோஷ் குமார்,<br>த/பெ. மனோகரன்,<br>56, நீலிமேடு<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 15.07.2019 |
| 4) | முறையிட்ட நாள் | | 15.07.2019 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 15.07.2019 |
| 6) | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 15.07.2019 |
| 7) | எதிரி முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | 15.07.2019 |
| 8) | எதிரி பிணையில் விடப்பட்ட நாள் | | 10.08.2019 |
| 9) | எதிரி காவலில் இருந்த நாட்கள் | | 15.07.2019 to 10.08.2019 |
| 10) | குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | | 17.09.2019 |
| 11) | அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர் | | செல்வி.முருகேஷ்வரி, |
| 12) | எதிரி தரப்பு வழக்கறிஞர் பெயர் | | திரு.முகமது இஸ்மாயில், |
| 13) | எதிரியிடம் கு.வி.மு.ச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள் | | 21.10.2019 |

<table>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரியின் மீது இ.த.ச. 387 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ்.</td></tr>
<tr><td>15)</td><td>எதிரியின் பதில்</td><td></td><td>எதிரி குற்றச்சாட்டை மறுத்தார்.</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td>
<table>
<tr><th></th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>06.06.2022</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>04.11.2022</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>04.11.2022</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>04.11.2022</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>30.11.2022</td><td>இல்லை</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>21.12.2022</td><td>21.12.2022</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17)</td><td>அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு.ச.317 போன்றவற்றை தவிர்த்து)</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>18)</td><td>எதிரியை கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள்</td><td></td><td>26.12.2022</td></tr>
<tr><td>19)</td><td>தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள்</td><td></td><td>ஒருவருமில்லை.</td></tr>
<tr><td>20)</td><td>உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு</td><td></td><td>ஏதுமில்லை.</td></tr>
<tr><td>21)</td><td>வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள்</td><td></td><td>16.05.2022</td></tr>
<tr><td>22)</td><td>விசாரணை முடிவுற்ற நாள்</td><td></td><td>30.07.2026</td></tr>
<tr><td>23)</td><td>நடுவரின் தீர்மானம்</td><td></td><td>எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை.</td></tr>
<tr><td>24)</td><td>முடிவு</td><td></td><td>எதிரி குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>25)</td><td>எதிரிக்கு, இத்தீர்ப்பாணையின்</td><td></td><td>அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | |
| 26) | தீர்ப்பு நாள் | | 03.08.2026 |

## தீர்ப்புரை

1) கடந்த 15.07.2019 ம் தேதி 15.00 மணிக்கு கரூர்நகர காவல்நிலைய சரகம் சுபாஷ் சந்திரபோஸ் அருகில் இவ்வழக்கின் வாதி சீனிவாசன் என்பவர் காய்கறி வாங்க காமராஜ் மார்க்கெட் செல்வதற்காக சுபாஷ் சந்திரபோஸ் சிலை அருகில் நடந்து வந்தபோது எதிரி சந்தோஷ்(எ)சந்தோஷ்குமார் வாதியிடம் குடிக்க பணம் கேட்டபோது வாதி தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னதால் எதிரி தனது இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்துக்காட்டி இருக்கும் பணத்தை எடுடா என்று மிரட்டியதால் வாதி உயிருக்கு பயந்துகொண்டு தனது சட்டைப் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.400/-ஐ எடுத்துக் கொடுத்தபோது எதிரி பணத்தைப் பிடிங்கிக் கொண்டு சென்றுள்ளார். எனவே இவ்வழக்கின் எதிரியின் செய்கையானது இ.த.ச. 387, 506(ii) ஆகிய பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல்நிலைய குற்ற எண்.433/2019 ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண்.232/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச.207-ஆவது பிரிவுபடி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரியின் மீது இ.த.ச. 387, 506(ii) ஆவது பிரிவுகளின் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள்

விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் அ.சா.பொ.1 ஆக சான்றுப்பொருள் ஒன்றும் குறியீடு செய்யப்படுகின்றன.

**5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-**

i) இவ்வழக்கில் **அ.சா.1**, தனது சாட்சியத்தில், “நான் புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். நான் பாலாஜி மெஸ்ஸில் 3 மாதமாக 2019 ம் வருடத்தில் பணிபுரிந்தேன். அப்போது 15.07.2019 ல் மார்க்கெட்டிற்கு காய்கறி வாங்க காலை 3.00 மணிக்கு போனேன். அப்போது ஆஜர் எதிரி சந்தோஷ் என்பவர் மார்க்கெட்டிற்கு பக்கத்தில் வைத்து என்னிடம் ரூ.400/- கேட்டு மிரட்டினார். நான் காசு இல்லை என்று சொன்னேன். பின்பு என் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினார். அதன்பின்பு என்னிடம் இருந்து ரூ.400/- எடுத்துக்கொடுத்துவிட்டேன். அதன்பின்பு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1. அந்த கத்தி அ.சா.பொ.1**. போலீசார் என்னை விசாரித்தார்" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2**, தனது சாட்சியத்தில், “நான் பசுபதிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். போலீசார் என்னை விசாரித்தார். சதிஷ் என்பவரை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3**, தனது சாட்சியத்தில், **“**நான் பசுபதிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். அ.சா.2 ஐ என்பவரை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கில் **அ.சா.4**, தனது சாட்சியத்தில்,**“**நான் பள்ளாபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் கையெழுத்து செய்த மற்றொரு நபர் பற்றி எனக்கு தெரியாது. ஒருநாள் கரூர் நகர காவல்நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன். **அந்த பார்வைமகசரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும்**

**அ.சா.ஆ.2.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை என சாட்சியமளித்துள்ளார்.

v) இவ்வழக்கில் **அ.சா.5**, தனது சாட்சியத்தில்,"நான் குளித்தலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். 15.07.2019 ம் தேதி கரூர்நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருக்கும் போது, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுக்கா, மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் கருப்பைய மகன் சீனிவாசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகரைப் பெற்று கரூர்நகர காவல் நிலைய குற்ற எண்.433/2019 சட்டப்பிரிவு 387,506(2) இ.த.சவின் படி 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவலறிக்கை மேல் விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3**" என சாட்சியமளித்துள்ளார்.

vi) இவ்வழக்கில் **அ.சா.6**, தனது சாட்சியத்தில்,"நான் தற்போது திருச்சி மாவட்டம், சோமரசம்பபேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.07.2019 ஆம் தேதி கரூர்நகர காவல் நிலைய காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்த போது உதவி ஆய்வாளார் கஸ்துாரி கரூர்நகர காவல் நிலைய குற்ற எண்.433/2019, ச/பி.387, 506(2) இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்பு அன்றைய தினமே மாலை 05.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன், லெட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5**. பின்பு சாட்சிகள் சீனிவாசன், தினேஷ், சதிஷ், மோகன், லெட்சுமணன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தக்க புலன் வைத்து தேடிவந்ததில் அன்றைய தினமே 19.30 மணிக்கு மக்கள்பாதை அருகில் இவ்வழக்கின் எதிரியான சந்தோஷ் (எ) சந்தோஷ்குமார் என்பவரை பிடித்து காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து சாட்சிகள் ரமேஷ், த/பெ. வடிவேல், ரமேஷ், த/பெ.மோகன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்து மிரட்டப்பயன்படுத்திய கத்தியை இடுப்பில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6**. அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி எதிரி மற்றும்

தடயத்துடன் காவல்நிலையம் கொண்டுவந்து திரேக சோதனை செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7**. பின்பு வழக்குச்சொத்தான கத்தியைப் படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.8**. பின்பு இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வளார் கஸ்துாரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 13.09.2019ம் தேதி எதிரி மீது ச/பி.387, 506(2) இதசவின் படி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது இ.த.ச. 387 மற்றும் 506(ii) ஆவது பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

9) அரசு தரப்பில், கடந்த 15.07.2019ம் தேதி 15.00 மணிக்கு கரூர்நகர காவல்நிலைய சரகம் சுபாஷ் சந்திரபோஸ் சிலை அருகில் இவ்வழக்கின் வாதி சீனிவாசன் என்பவர் காய்கறி வாங்க காமராஜ் மார்க்கெட் செல்வதற்காக சுபாஷ் சந்திரபோஸ் சிலை அருகில் நடந்து வந்தபோது எதிரி சந்தோஷ்(எ)சந்தோஷ்குமார் வாதியிடம் குடிக்க பணம் கேட்டபோது வாதி தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னதால் எதிரி தனது இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்துக்காட்டி இருக்கும் பணத்தை எடுடா என்று மிரட்டியதால் வாதி உயிருக்கு பயந்துகொண்டு தனது சட்டைப் பாக்கெட்டில் வைத்திருந்த பணம்

ரூ.400/-ஐ எடுத்துக் கொடுத்தபோது எதிரி பணத்தைப் பிடிங்கிக் கொண்டு சென்றுள்ளார். எனவே இவ்வழக்கின் எதிரியின் செய்கையானது இ.த.ச. 387, 506(ii) ஆகிய பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல்நிலைய குற்ற எண்.433/2019ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் அ.சா.1 சீனிவாசன் நிகழ்வுநிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் ஆவார் அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "நான் புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். நான் பாலாஜி மெஸ்ஸில் 3 மாதமாக 2019ம் வருடத்தில் பணிபுரிந்தேன். அப்போது 15.07.2019ல் மார்க்கெட்டிற்கு காய்கறி வாங்க காலை 3.00 மணிக்கு போனேன். அப்போது ஆஜர் எதிரி சந்தோஷ் என்பவர் மார்க்கெட்டிற்கு பக்கத்தில் வைத்து என்னிடம் ரூ.400/- கேட்டு மிரட்டினார். நான் காசு இல்லை என்று சொன்னேன். பின்பு என் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினார். அதன்பின்பு என்னிடம் இருந்து ரூ.400/- எடுத்துக்கொடுத்துவிட்டேன். அதன்பின்பு நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்" என கூறியுள்ளார். மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில், **"புகாரை போலிசார் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன்...... புகாரை நான் படித்துப் பார்க்கவில்லை. என்னிடம் புகாரில் கையொப்பம் வாங்கி கொண்டார்கள்"** என்று கூறியுள்ளார்.

11) மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில், சம்பவ தினத்தன்று அ.சா.1 காய்கறி வாங்க மார்க்கெட்டிற்கு சென்றிருத்ததும் அப்போது காலை 03.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரியான சந்தோஷ் என்பவர் அ.சா.1னிடம் கத்தியைக் காட்டி மிரட்டி ரூ.400/- பணத்தைப் பறித்துச்சென்றதும் பின்னிட்டு அ.சா.1 காவல்நிலையம் சென்று எதிரி மீது புகார் கொடுத்துள்ளதும் தெரியவருகிறது. ஆனால் தனது குறுக்குவிசாரணையில், மேற்படி புகார் மனுவை போலிசார் எழுதியதாகவும் அதனை படித்துப் பார்க்காமல் தான் கையொப்பம் செய்ததாகவும் கூறியுள்ளதை பரிசீலிக்கையில், போலிசார் தயார் செய்த புகார் மனுவில் அதில் என்ன சங்கதி

எழுதப்பட்டுள்ளது என்பது தெரியாமலேயே அவர் கையொப்பம் செய்து கொடுத்தது தெரியவருகிறது. எனவே மேற்படி புகாரின் உண்மைத்தன்மையானது கேள்விக்குறியாகின்றது.

12) மேலும் இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட தினேஷ் மற்றும் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட சதீஷ் ஆகிய இருவரும் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில், **"சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது"** என்று கூறி இருவருமே பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். அடுத்ததாக இவ்வழக்கில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட மோகன் என்பவர் இவ்வழக்கில் பார்வைமகசர் சாட்சியாக அரசுதரப்பில் முன்னிருத்தப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.4 தனது முதல்விசாரணை சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் தன்னுடன் கையொப்பம் செய்த மற்றொரு நபரைப் பற்றி தனக்கு தெரியாது என்றும் ஒருநாள் கரூர்நகர காவல்நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்ததாகவும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

13) மேற்படி இவ்வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரையும் அரசுதரப்பில் முன்னிருத்தப்படவில்லை மற்றும் அரசுதரப்பில் முன்னிருத்தப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரும் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில் சம்பவம் பற்றி தங்களுக்கு நேரடியாக தெரியாது என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் பார்வைமகசர் சாட்சியாக அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட மோகன் என்பவரும், தனது முதல்விசாரணை சாட்சியத்தில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கரூர்நகர காவல்நிலையத்தில் வைத்து பார்வைமகசரில் கையொப்பம் செய்ததாக கூறியுள்ளார். மேற்படி அ.சா.4 ன் கூற்றிலிருந்து பார்வைமகசர் சாட்சியான அ.சா.4, காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக கூறியதிலிருந்து இவ்வழக்கின் பார்வைமகசரானது சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதா என்பதில் பலத்த சந்தேகம் ஏற்படுகிறது. மேலும் ஏற்கனவே போலிசார் தயார் செய்த பார்வைமகசரில் மேற்படி அ.சா.4 போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் மட்டும் செய்துள்ளார் என்பதும் மேற்படி கூற்றிலிருந்து தெளிவாகின்றது.

14) அடுத்ததாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் அ.சா.6 உதயக்குமார் அவர்கள் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், "நான்

தற்போது திருச்சி மாவட்டம், சோமரசம்பபேட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.07.2019 ஆம் தேதி கரூர் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்த போது உதவி ஆய்வாளர் கஸ்தூரி கரூர் நகர காவல் நிலைய குற்ற எண்.433/2019 ச/பி.387, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்துள்ளார். மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்பு அன்றைய தினமே மாலை 5 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன், இலட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்பு சாட்சிகள் சீனிவாசன், தினேஷ், சதிஷ், மோகன், இலட்சுமணன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தக்க புலன் வைத்து தேடிவந்ததில் அன்றைய தினமே 19.30 மணிக்கு மக்கள்பாதை அருகில் இவ்வழக்கின் எதிரியான சந்தோஷ் (எ) சந்தோஷ்குமார் என்பவரைப் பிடித்து காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து சாட்சிகள் ரமேஷ், த/பெ. வடிவேல், ரமேஷ், த/பெ.மோகன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து மிரட்டப்பயன்படுத்திய கத்தியை இடுப்பில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி எதிரி மற்றும் தடயத்துடன் காவல்நிலையம் கொண்டுவந்து திரேக சோதனை செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்பு வழக்குச் சொத்தான கத்தியைப் படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு இவ்வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வளார் கஸ்தூரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 13.09.2019 ம் தேதி எதிரி மீது ச/பி.387, 506(2) இதசவின் படி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்" என்று கூறியுள்ளார்.

15) மேற்படி அ.சா.6 ன் சாட்சியத்தை ஆராய்கையில், இவ்வழக்கினை புலன்விசாரணை செய்து சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரித்து எதிரியை கைது செய்து எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் மற்றும் எதிரி தானாக முன்வந்து தன்னிச்சையாக தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிகளின் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்ததாகவும் மற்றும் அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.1 ஐ மிரட்ட பயன்படுத்திய கத்தியை எதிரி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்ததை அவர்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர்படுத்தியதாகவும்

இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தனது முதல்விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளார். ஆனால் இவ்வழக்கின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஒப்புதல்வாக்குமூல சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் ஒரு சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை. மேற்படி கூற்றுகளிலிருந்து உண்மையிலேயே எதிரி தானாக முன்வந்து தன்னிச்சையாக தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிகளின் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தாரா என்பதிலும் மற்றும் அதே சாட்சிகளின் முன்னிலையில் அ.சா.1 ஐ மிரட்ட பயன்படுத்திய கத்தியை எடுத்து எதிரி ஆஜர்படுத்தினாரா என்பதிலும் பலத்த சந்தேகம் ஏற்படுகிறது.

16) மேற்படி கூற்றுகளை கவனமாக பரிசீலிக்கையில், இவ்வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனுவானது போலிசார் எழுதி தன்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டதாகவும் அதை தான் படித்துப் பார்க்காமல் கையொப்பம் செய்ததாகவும் அ.சா.1 கூறியுள்ளதிலிருந்து அ.சா.1 ன் சாட்சியமானது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை மற்றும் மேலும் இவ்வழக்கில் அரசுதரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில், சம்பவம் பற்றி தங்களுக்கு நேரடியாக தெரியாது என்றும் மற்றும் அ.சா.4, போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கரூர்நகர காவல்நிலையத்தில் வைத்து பார்வைமகசரில் கையொப்பம் செய்ததாகவும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.6, இவ்வழக்கின் எதிரி தானாக முன்வந்து தன்னிச்சையாக தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிகளின் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்ததாகவும் மற்றும் அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.1 ஐ மிரட்ட பயன்படுத்திய கத்தியை எதிரி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்ததை அவர்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர்படுத்தியதாகவும் கூறியுள்ளபோதிலும் இவ்வழக்கினை தீர்மானிக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஒப்புதல்வாக்குமூல சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. எனவே மேற்படி கூற்றிலிருந்து உண்மையிலேயே ஆஜர் எதிரிதான் சம்பவ தினத்தன்று அ.சா.1 ஐ கத்தியைக் காட்டி மிரட்டி பணத்தை பறித்துச்சென்றார் என்பதை மேற்படி அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

17) எனவே மேற்கண்டவாறு விவாதங்கள் மற்றும் சாட்சிய

சான்றாவணங்களை பரிசீலித்ததின் அடிப்படையில் எதிரியின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 387, 506(ii) பிரிவுகளின் படியான குற்றச்சாட்டுகளானது அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

18) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 387, 506(ii) ஆவது பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச.248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19) இவ்வழக்கில் வழக்குச்சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண்.267/2019, அ.சா.பொ.1** ல் கண்டுள்ள சுமார் 30 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின்னிட்டு உரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 03.08.2026 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.08.03 19:08:18 +0800

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>

| அரசுதரப்பு சாட்சிகள் | சாட்சிகளின் பெயர் | விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | சீனிவாசன் | புகார்தாரர் |
| அ.சா.2 | தினேஷ் | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.3 | சதீஷ் | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.4 | மோகன் | பார்வைமகசர் சாட்சி |
| அ.சா.5 | திருமதி.கஸ்தூரி, உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி |

| | | |
|---|---|---|
| அ.சா.6 | திரு.உதயக்குமார், காவல் ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| **அரசுதரப்பு சான்றாவணங்கள்** | **சான்றாவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | முதல்தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | பார்வைமகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | படிவம்-91 | அ.சா.6 |

**<u>அரசுதரப்பு சான்றுப்பொருள் :-</u>**

| **அரசுதரப்பு சான்றுப்பொருள்** | **சான்றுப்பொருளின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது** |
|---|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 30 செ.மீ நீளமுள்ள கத்தி-1 | அ.சா.1 |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.08.03 19:08:29 +0800

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| 03.08.2026<br><br>**சிசி.எண்.232/2019**<br><br>எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக 317CrPC மனுவானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.<br><br>தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 387, 506(ii) ஆவது பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 267/2019, அ.சா.பொ.1** ல் கண்டுள்ள சுமார் 30 செ.மீ நீளமுள்ள கத்தி ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின்னிட்டு உரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.08.03 19:08:39 +0800<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | | |